Vol. 9 No. 4

புரட்டாசி-மார்கழி 2052
October - December 2021

ISSN : 2321-984X

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr.A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. Aranga. Pari*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. A. Palanisamy*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. M. Ramakrishna*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. M. Arunachalam*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Bharathi Prakash*

# நவீனத் தமிழாய்வு

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts a[illegible] Humaniti[illegible]), Language
Literature and Li[illegible], Tamil
UGC [illegible] Liste[illegible] Journal

மறு அச்சு

**Published by**

**RAJA PUBLICATIONS**

**No. 10 (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India.**
**Mobile : 9600535241**
**Website : www.rajapublications.com**

**30** பகுதி-8
Part -8

"நிறைவின்மை, நிலையாமை ஆகிய குறைபாடுகளை உலகியல் வாழ்வில் அனுபவிக்கின்ற மனிதன் நிறைவானதும், நிலையானதும் ஆன ஒன்றை அனுமானித்து அதனை இறைவன் என்றழைக்கின்றான்."[1] என்கிறார் க.நாராயணன். மாணிக்கவாசகர்,

"வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி
ஊனாகி உயிராகி உண்மையுமாய்
இன்மையுமாய்"[2]

விளங்கக் கூடியவன் இறைவன் என்றியம்பிச் சென்றார். கம்பர்,

"சாணிலும் உளன் ஓர் தன்மை அனுவினைச்
சதகூறிட்ட
கோணிலும் உளன் மாமேரு குன்றினும் உளன்"[3]

என்று பிரகலாதன் வாயிலாகக் கடவுள் இருப்பதை எடுத்துக் கூறுவார். இறைவன் ஆணா? பெண்ணா? இல்லை அலியா? அவன் இருக்கிறானா? இல்லையா? அவனுக்கு உருவம் உண்டா? இல்லையா? என்பது பற்றி உறுதியாகத் தீர்ப்பளிப்பது எளிதல்ல. அவனைப் பற்றி விளக்குவதென்பது பெரிய உபத்திரவமான விவகாரம் என்று சலித்துக்கொள்கிறார் நம்மாழ்வார்.

"ஆணல்லன் பெண்ணல்லன் அல்லா
அலியுமல்லன்காணலும் ஆகான்"[4]

முதலான தத்துவ ஞானிகளைப் போன்று கவிக்கோவும்,

"முதலும் ஒன்று முடிவும் ஒன்று;
முதிர்ந்த படைப்பெல்லாம்
எதிலும் பலப்பலவாய்
இருந்தாலும் இறுதியில் அவ்
ஒருவனையே சென்றடையும்
உலகத்தின் எண்கள்
சருவமும் செத்துவிடும்
ஒன்று மட்டும் சாகாது!" (அப்துல் ரகுமான்,
இறந்ததால் பிறந்தவன், ப.84)

என வருவதில் வரும் சாகாது என்பது இறைவனைக் குறிக்கும் எனக் கொண்டால், கவிக்கோவின் கடவுள் பற்றிய தத்துவமும் எளிதாக விளங்கிக் கொள்ளலாம். மனித அறிவுக்கெல்லாம் அப்பாற்பட்ட ஒரு மகத்தான சக்தி உண்டு என்பதைச் சான்றோர்கள் அனைவரும் ஒத்துக் கொள்கின்றனர் நாத்திகர்களும் ஏற்றுக் கொள்கின்றனர். அந்த மகத்தான சக்தியே இறைவனாவான். இறைவனே நமது வாழ்வை வகுத்துக் காட்டுபவனும் வழிகாட்டுபவனும் ஆவான் என்பதில் கவிக்கோவுக்கு உடன்பாடுண்டு.

உலகில் பல மதங்கள்; பல கடவுள்கள்; பல தெய்வங்கள் என்ற நடை முறையில் இறைவழிபாடுகள் நடந்து வருகின்றன. இறைவனுக்கு உருவம் இல்லையே தவிர, நாம் பெயர்கள் எத்தனை வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம். மதங்களெல்லாம் இணையக்கூடிய ஒரு கொள்கையில் இணைப்பது தான் என் நோக்கம்[5] என்று கூறுகிறார்.

"நன்றாய மதுவின்
போதை ஏறினால்
ஒன்றே இரண்டாய்த்
தெரியும் அது போல்
அஞ்ஞான போதையில்
ஆழ்ந்தவர் இறைவனை
இருவர் என்பர்
மூவர் என்பர்
பொய்வம் பிவையெலாம்
புரளிகள் உண்மையில்
தெய்வம் ஒன்றே
தெய்வம் ஒன்றே" (அப்துல் ரகுமான்,
இறந்ததால் பிறந்தவன், ப.81)

என்று வலியுறுத்திக் கூறுவதினால், கவிக்கோவின் கடவுள் தத்துவம் சிறப்பாக வெளிப்படக் காணலாம். ஒரே கடவுளை, மதவாதிகள் பல கடவுளர்களாகப் பிரித்துக் காட்டும் போக்கைக் கவிக்கோ,

**Chief Editor**

**Dr. M. SADIK BATCHA**
Associate Professor
Department of Thamizh
Jamal Mohamed College (Autonomous)
Tiruchirappalli - 20, Tamil Nadu, India.

**Advisory Editor**

**Dr. N. CHANDRA SEGARAN**
Assistant Professor of Thamizh
Centre of Indian Languages, School of Language,
Literature &Culture Studies
Jawaharlal Nehru University
New Delhi - 110 067, India

**Editorial Board**

**Dr. MAM. Rameez**
Head
Department of Languages
Snr. Lecturer, Grade-I in Thamizh
South Eastern University of Srilanka
Oluvil, Srilanka # 32360.

**Dr. Jeyaraman**
Professor and Head
Department of Thamizh
Thiruvalluvar University,
Vellore - 632 115
Tamil Nadu, India.

**Dr.A. Ekambaram**
Professor
Department of Tamil Literature
Madras University
Chennai - 600 005
Tamil Nadu,India.

**Dr. [illegible]**
Professor & Head
Department of Thamizh Studies
Manonmaniam Sundaranar University
Tirunelveli-627 012
Tamil Nadu, India

**Dr. S. Chitra**
Professor & Head
Dept. of Thamizh
Bharathiar University
Coimbatore - 641 046
Tamil Nadu, India.

**Dr. S.Senthamizh Pavai**
Professor& Director
Centre for Tamil Culture
Alagappa University
Karaikudi – 630 003
Tamil Nadu, India.

**Dr. ARANGA. PARI**
Professor
Department of Thamizh
Annamali University,
Chidambram-608 002
Tamil Nadu, India.

**Dr. A. Shunmughom Pillai**
Associate Professor
Department of Folklore
Tamil University
Thanjavur – 613 010
Tamil Nadu, India

**Dr. P. Jeyakrishnan**
Director (MSCDCS)
Department of Thamizh
University of Kerala
Karyavattom,
Thiruvananthapuram - 695 581
Kerala, India.

**Dr. S. Easwaran**
Associate Professor & Head
Department of Thamizh
National College (A)
Tiruchirappalli - 620 001
Tamil Nadu, India.

**Dr. Kumara Selva**
Associate Professor & Head
Department of Thamizh
Nesamani Memorial Christian College
Marthandam - 629 165
Kanyakumari, Tamil Nadu, India.

**Dr. A. Palanisamy**
Professor
Dept. of Physical Education and Yoga
Bharathidasan University
Tiruchirappalli – 620 024
Tamil Nadu, India

**Dr. Ganesan Ambedkar**
Associate Professor
Department of Dravidian &
Computational Linguistics,
Dravidian University,
Kuppam 517 426
Andhra Pradesh, India.

**Dr. Kumar**
Assistant Professor of Thamizh
School of Social Sciences & Humanities
Central University of Tamilnadu
Tiruvarur-610 005, Tamil Nadu, India.

**Dr. S. Kalpana**
Assistant Professor
Department of Tamil Studies
Annamalai University
Annamalai Nagar - 608 002
Tamil Nadu, India

**Dr. T. Vishnukumaran**
Assistant Professor
Department of Thamizh
Dravidian University, Kuppam,
Andra Pradesh - 517 426, India.

**Dr M N Rajesh**
Assistant Professor,
Department of History,
School of Social Sciences,
University of Hyderabad,
Dr C R Rao Road, Gachibowli,
Hyderabad -500046 Telangana state

**Dr. M. Ramakrishnan**
Assistant Professor,
Centre for Tribal Folklore,
Language & Literature,
Central University of Jharkhand,
CTI Campus, Brambe, Ranchi – 835 205
Jharkhand, India

**Dr. Govindaraj**
Assistant Professor
Center for Bharathidasan Studies
Bharathidasan University
Tiruchirappalli - 620 024
Tamil Nadu, India.

**Dr. Uma Devi**
Assistant Professor
Department of Modern Indian
Languages and Literary Studies
University of Delhi
Delhi - 110 007, India.

**Dr. Senthil Prakash**
Assistant Professor
Department of Thamizh
Basha Bhawan
Visva Bharathi, Santhinikethan
West Bengal-731 235, India.

**Dr.M. Arunachalam**
Associate Professor
P.G. & Research Dept. of Thamizh
E.V.R.College (A)
Tiruchirappalli - 620 023,
Tamil Nadu, India.

**Dr. S. Vignesh Ananth**
Assistant Professor in Thamizh
Department of Indian Languages,
Faculty of Arts,
Banaras Hindu Univeristy
Varanasi - 221 005,Uttar Pradesh

**Dr. Pon. Kathiresan**
Assistant Professor in Thamizh
Ganesar College of Arts & Scie
Melaisivapuri-622 403
Pudukkottai (Dt.)
Tamil Nadu, India.

**Dr. S. Bharathi Prakash**
Assistant Professor
Tamil
PSG College of Arts & Science
Avinashi Road, Civil Aerodrome Post,
Coimbatore-641 014.

சிலந்தி இரையைப் பிடிப்பதற்காகக் கட்டும் வலையை அழகாகப் பின்னி அமைப்பதைப் போலவே, சுயநல மதத்தலைவர்கள் தங்கள் வயிற்றுப் பிழைப்புக்காக மக்களைக் கவரவும், அவர்களை மகிழ்விக்கவும், மூடக்கொள்கைகளையும் சடங்கு சம்பிரதாயங்களையும், இறைவனின் பேரால் அழகாகப் புனைந்து வைக்கின்றனர். (அப்துல் ரகுமான், சிலந்தியின் வீடு, ப.33) என்று எடுத்துக்காட்டுகிறார். மண்ணும் விண்ணும் மறிகடலும் வியன் நிலமும் இறைவனின் திருவுருவங்களே. இறைவனைப் பற்றிய தத்துவங்கள் நாம் எழுத ஆரம்பித்து விட்டால் ஆயிரக்கணக்கில் எழுதலாம் என்றும், கோடிக்கணக்கில் பெயர்களை இறைவனுக்குச் சூட்டலாம் என்றும் கூறுகிறார் கவிக்கோ.

**"காலமெனும் ஏட்டில்**
**கதையெழுதிக் குவிக்கின்ற**
**மூல எழுத் தாளன் நீ**
**முளைத்து வந்த பாத்திரம் நாம்**
**ஒரு கோடி புனை பெயர்கள்**
**உனக்கு நாம் சூட்டுகிறோம்" (அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், ப.32)**

இறைவன் ஒருவனே அவனுக்கு நாம் காதலியை பலவாறு புகழ்வதைப் போல, இறைவனையும் பலவாறு புகழலாம் என்று கூறுகின்ற கவிக்கோ, பேரின்பம் தரும் இறைவனை விழிக்க கோடிபெயர்களும் போதாது என்கிறார்.

### காதலே கடவுள்

உலகில் உள்ள அனைத்தும் காதலால்தான் இயங்கிக் கொண்டுள்ளன; காதல் இல்லாமல் போகும்போது உலகம் அழிந்து போகும். உயிருள்ள மனிதர்கள் முதலாக உயிரற்ற அஃறிணைகள் ஈறாகக் காதலாலே இயங்குபவர்களாக உள்ளனர். சிவநெறியில் வாழ்ந்த செந்தமிழர் அன்பே கடவுள் என்றனர். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே,

**"அன்பு சிவம் இரண்டென்பர் அறிவிலார்**
**அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்"[6]**

என்று திருமூலர் கூறியுள்ளார். பாரதியாரும் சக்தி வழிபாட்டில் தன்னை மறந்து பாடுகையில்,

**"அன்பு கனிந்த கனிவே சக்தி"[7]**

என்று கூறுகிறார். இறைவன் இந்தப் பிரபஞ்சம் இயங்கப் பல விதிகளை உண்டாக்கி வைத்திருக்கிறான். அவற்றுள் காதலும் ஒன்று (அப்துல் ரகுமான், தட்டாதே திறந்திருக்கிறது, ப.85). காதல் இறைவனிடம் அழைத்துச் செல்லும் பாதை. பெண் காதலைக் கற்றுத்தரும் பள்ளியாக இருக்கிறாள் (அப்துல் ரகுமான்,இது சிறகுகளின் நேரம், ப.8). கவிக்கோ சமயப்பற்றுள்ள குடும்பத்தில் பிறந்து ஆழ்ந்த தெய்வ நம்பிக்கையோடு வாழ்க்கையை நடத்தி வந்தவர். கவிக்கோ,

**"ஒரு நாமம் ஓர் உருவம்**
**ஒன்றுமிலாய்! ஆயிரம்**
**திருநாமம் பாடிநாம்**
**தெள்ளேனம் கொட்டுகிறோம்" (அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், ப.31)**

என்னும் கவிதையடிகளில் இறைவன் ஒருவனே என்பதை வலியுறுத்திப் பேசி, அவனுக்கு ஆயிரம் திருநாமம் மனிதர்களால் சூட்டப்பட்டுள்ளதையும் கவிக்கோ எடுத்துரைக்கிறார். வெற்றாரவாரமும் வெளி வேஷமும் இறைவழிபாட்டிற்குத் தேவையில்லை என்பது கவிக்கோவின் கருத்தாகிறது. பூவும் பழமும் மெழுகுவர்த்தியும் ஊதுவர்த்தியும் தன்னை வருத்தியும் பூசைகள் செய்ய வேண்டியதில்லை என்பார்.

"நீறு பூசுவதும் வேதம் ஓதுவதும் நீள் பெருங் கோயிலைச் சுற்றி வருவதும் ஆரவாரமுடைய புறச் செயல்கள். மனம் ஒன்றாத இப்புறச் செயல்கள் இறைவழிபாடாகாது"[8] என்று இறைவழிபாட்டு முறைகளிலும் இறையியல் தத்துவத்திலும் புதிய சிந்தனைப்போக்கையும் புரட்சியையும் செய்தவர்கள் சித்தர்கள். அவர்களுள் சிவவாக்கியர் என்பவர் வழிபாடுகள் என்ற பெயரில் சமுதாயத்தில் மலிந்துவிட்ட மூடப் பழக்கங்களையும், புறக்கோலங்களையும் வன்மையாகக் கண்டித்தார். கோயிலை வலம்

## Modern Thamizh Research

A Quarterly International Multilateral Thamizh Journal

*Published by*

**Raja Publications, Trichy-23.**


## INFORMATION FOR AUTHORS

Journal of **Modern Thamizh Research** (JMTR) is published Four (Every March, June, September & December) times a year. It primarily publishes significant original papers and survey articles on important advances of Modern Thamizh research in any of the following major areas:

- Classicalism (செவ்வியல்)
- Modernism (நவீனம்)
- Folklorism (நாட்டுப்புறவியல்)
- Archeologism (தொல்லியல்)
- Spritualism (பக்தியியல்)
- Traditioanlism (மரபியல்)
- Mediaism (ஊடகவியல்)
- Journlism (இதழியல்)
- Translationism (மொழிபெயர்ப்பியல்)
- Comparativism (ஒப்பியல்)
- Educationalism (கல்வியியல்)
- Histroism (வரலாற்றியல்)

### Submission of the Manuscript

1. Manuscripts written in Thamizh or English may be submitted in two copies to the Chief Editor **Dr. M. Sadik Batcha, Associate Professor of Tamil, PG and Research Department of Thamizh, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli - 620 020, Mobile : 9600535241, Email : ms_batcha@yahoo.co.in**

2. Manuscripts should be prepared according to the following format.
   The first page of the manuscript should contain
   (i) the title
   (ii) the name(s) and institutional affiliation (s) of the author(s).
   (iii) an abstract of not more than 100 words; and
   (iv) a footnote giving the name and present address of the author to whom proofs and reprint order form should be addressed.
   (v) References at the end of the manuscript should be arranged in alphabetical order of the first letter of the surname and styled and punctuated according to the following format.
   [1] author(s) name(s), "Book name", Page, Edition number, Published Year, Book Publisher address.

### Publication of Accepted Papers

The editorial Policy of JMTR is to give a clear reply about the acceptance of all submitted papers, within a period of one month.

### Subscription Rate of JMTR

Libraries, Institutions and other establishments can subscribe for JMTR through publisher : **Raja Publications, 10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India. Mobile : 9600535241 website : rajapublications.com** and in case of any difficulty they should write to the Chief Editor at address given elsewhere.

| Subscription Rates | Years | Printed |
|---|---|---|
| (Year) India INR ₹ | 1 Years Only | 2000 |
| Other Countries INR ₹ | 1 Years Only | 3000 |
| (Life) India ₹ | 10 Years Only | 10,000 |
| Other Countries INR ₹ | 10 Years Only | 20,000 |

Re Print

# கவிக்கோவின் படைப்புகளில் கடவுள் தத்துவம்

முனைவர் மு.முகமது அலி ஜின்னா
உதவிப்பேராசிரியர், முதுகலை மற்றும் தமிழாய்வுத்துறை
முத்துரங்கம் அரசு கலைக் கல்லூரி (த), ஓட்டேரி, வேலூர்- 632 002, தமிழ்நாடு, இந்தியா.

## முன்னுரை

தனிமனிதன் சமூகமாக வாழ முற்பட்டபோது சமுதாய வாழ்வு மலர்ந்தது. தனது பாதுகாப்பிற்காகச் சட்டங்கள், சம்பிரதாயங்கள், சடங்குகள் ஆகியவற்றை ஏற்படுத்திக் கொண்டான்; பல சமயங்கள் தோன்றின. அவற்றை நியாயப்படுத்துவதற்காகப் புதிய வழிமுறைகளையும் கோட்பாடுகளையும் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான். சமயம் மற்றும் வாழ்வின் பல்வேறு சிக்கல்களையும் ஆராய்ந்தான். சிக்கல்களுக்கு எழுந்த முடிவுகளும், அதன் சிந்தனைகளும் தத்துவங்கள் ஆயின. இவ்வகைத் தத்துவக் கருத்துகள் இலக்கியங்களில் காலந்தோறும் பயின்று வந்துள்ளன. அவ்வகையில் கவிக்கோவின் படைப்புகளில் காணப்படும் தத்துவக் கோட்பாடுகளை இக்கட்டுரை ஆய்கிறது.

## ஆய்வுச் சுருக்கம்

உலகிற்கு அடிப்படையாகவும் அனைத்து உயிர்களையும் படைத்து, காத்து, ஒடுக்கி, மீண்டும் வெளிப்படுத்தும் ஒன்றை அறிந்து கொள்ளும் முயற்சிதான் மெய்ப்பொருள் தத்துவம். சமயங்கள், ஆன்மிகம், மறைபொருளியல், அறிவியல் ஆகியவை யாவும் தத்துவத்திலிருந்து பிரிந்த கிளைகளாகும். மெய்ப்பொருள் அல்லது பரம்பொருள் என்பது கடவுளைக் குறிக்கப் பயன்படும் சொற்களாகும் என்று கூறும் கவிக்கோ கடவுள் யார் என்பதையும், காதலே கடவுளாக இருப்பதையும் இக்கட்டுரை வாயிலாக எடுத்துரைக்கப்படுகின்றது.

## கடவுள் யார்?

இறைவனை அறிய வேண்டும் என்ற அவா மனிதர்களிடம் இயல்பாகவே இருக்கிறது. இதுவே இறைவன் ஒருவன் இருக்கிறான் என்பதற்குச் சான்று. அது மட்டுமல்ல மனிதன் இறைவனை ஓரளவுக்கு அறிந்திருக்கிறான் என்பதையும் இது உணர்த்துகிறது. பொய்யறிவு நீங்கி மெய்யறிவு பெற்றால் இறைவனை அறியலாம்.

இறைவன் எங்கே இருக்கிறான்? என்று சிலர் கேட்கின்றனர். புத்திசாலித்தனமாகக் கேட்பதாக அவர்களுக்கு நினைப்பு. இறைவன் ஆள் அல்ல இதோ இங்கே இருக்கிறான் என்று காட்டுவதற்கு. படைக்கப்பட்ட பொருள்களுக்குத்தான் இருப்பதற்கு இடம், காலம் எல்லாம் தேவை. இறைவன் என்பது பிரபஞ்சத்தைப் படைத்து இயக்கும் ஒரு மகா சக்தியின் பெயர். (அப்துல் ரகுமான், மகரந்தச் சிறகு, ப.56)

காலமும் இடமும் படைப்புகளுக்குத்தான் உண்டு படைத்தவனுக்கு இல்லை. காலமும் இடமும் கூடப் படைப்புத்தான். இவற்றையெல்லாம் படைத்தவன் இறைவன். அவன் படைப்புகள் ஏதும் இல்லாத போதும் இருந்தான். படைப்புகள் ஏதும் இல்லாமல் போகும்போதும் இருப்பான். அதனால்தான் அவனை உண்டு என்றோ இல்லை என்றோ சொல்ல முடிவதில்லை. (அப்துல் ரகுமான், இல்லையிலும் இருக்கிறான், ப.9) என்கிறார் கவிக்கோ. இறைவன் என்பது பொறி, புலன் கடந்ததொரு கருத்தாகும். இருப்பினும் தத்துவவாதிகள் கடவுள் பற்றிய பல்வேறு விளக்கங்கள் தந்துள்ளனர்.

வருவதும், குளங்களில் நீராடுவதும், சிலையை வழிபடுவதும் மந்திரத்தை முணுமுணுப்பதும் உண்மையான வழிபாடாகா என்பதை அவர்,

"கோயிலாவது ஏதடா குளங்களாவது ஏதடா?
கோயிலும் குளங்களும் கும்பிடும் குலாமரே,
கோயிலும் மனத்துளே குளங்களும் மனத்துளே"[3]

என்ற பாடலின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். புறக் கோலங்களை நீக்கிவிட்டு ஒழுக்கத்தோடு வாழ்ந்து, உலக உயிர்களோடு அன்பாக வாழ்ந்தாலே இறையருள் கிட்டும் என்பது தெளிவாகிறது.

"இடுகுறியாய்ச் சொல்வதற்கோ
இயற்பெயர் ஒன்றில்லாதாய்
தொடு குறியாய் நாக்குவிரல்
தொட்டதெல்லாம் உன்பெயரே!" (அப்துல் ரகுமான், நேயர் விருப்பம், ப.31)

என்பது கவிக்கோவின் இறைத் தத்துவமாக அமைந்துள்ளது.

## தொகுப்புரை

சுயத்தை இழந்தால் ஒவ்வொருவரும் இறைவனைத் தரிசிக்கலாம் என்று சித்தர் வழியில் நின்று எடுத்துரைக்கிறார். கடவுள் எங்கே? எப்படி இருக்கிறான்? என்பவற்றிற்கு எளிதாகப் பதில் சொல்லிவிட முடியாது என்கிறார். தன் சுயத்தை இழந்தவன் கூட முழுமையாக இறைவனைத் தரிசித்துவிட முடியாது என்கிறார். காலமும் இடமும் படைப்புகளுக்குத் தான் உண்டு. படைத்தவனுக்கு இல்லை என்கிறார். காலமும் இடமும் கூட படைப்புத்தான். இவற்றையெல்லாம் படைத்தவன் இறைவன். அவன் படைப்புகள் ஏதும் இல்லாதபோதும் இருந்தான்; படைப்புகள் ஏதும் இல்லாமல் போகும் போதும் இருப்பான். எனவேதான் இறைவனை உண்டு என்றோ இல்லை என்றோ சொல்ல முடிவதில்லை என்கிறார்.

எது அனைத்துக்கும் மூலமோ அதைத்தான் சமயங்கள் கடவுள் என்கின்றன. இறைவன் என்றால் மதங்கள் வரைந்து காட்டிய உருவங்களை நினைத்துக்கொண்டு சிலர் மறுக்கலாம். எனவே அதைப் பரம்பொருள் என்பதே நல்லது. ஏனெனில் இதை நாத்திகர்களும் நிராகரிக்க முடியாது என்கிறார் கவிக்கோ.

## முடிவுரை

படைப்புகள் வெளிப்படும் முன் இறைவனிடம் முதலில் உதித்த உணர்வு காதல். அந்தக் காதலே பிரபஞ்சத்தின் படைப்புக்குக் காரணமாயிற்று. இறைவன் தான் காதலிக்கப்பட வேண்டும் என்று விரும்பினான். அதனாலேயே மனிதனைப் படைத்தான் என்கிறது சூ.ஃபித்துவம் என்று காதலையே கடவுளாகக் கவிக்கோ நிறுவுகிறார் என்றால் மிகையில்லை. எனவே பிரபஞ்சம் காதலால் படைக்கப்பட்டது. காதலாலேயே இயங்குவது என்று எடுத்துக்கொள்ளலாம்.

அன்றைய நாள் சித்தர்கள் போலவும் முனிவர்கள் போலவும் வாழ்வைத் துறந்து வனம் புகுந்து வைகுண்டம்-சொர்க்கத்திற்கு வழிதேடச் சொல்லவில்லை. வாழ்க்கையை வளமாக வாழ்ந்து, அனுபவித்து இறைவனை உணர்ந்து இன்பங்காணுதல் வேண்டும் என்பது கவிக்கோவின் கருத்தாகும்.

## அடிக்குறிப்புகள்

1. க.நாராயணன், சித்தர் தத்துவம், ப.161., பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், ஈரோடு, மு.ப., 1994.
2. மாணிக்கவாசகர், திருவாசகம், திருச்சதகம், பாடல்.15., சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பு 1983.
3. கம்பர், கம்பராமாயணம், இரணியன் வதைப் படலம், பாடல்.124., மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், மு.ப., 1983.

| | | |
|---|---|---|
| 353. பொ. அறிவழகன் | செங்கோட்டை ஓலை ஆவணத்தில் காணப்படும் வரி நிர்வாக முறை | 2439-2442 |
| 354. கா. கணநாதன் | முக்கூடற்பள்ளு வழி மரபுசார் வேளாண்மை | 2443-2449 |
| 355. நா. பிரபு & சி. சந்திர காந்தி | கமழ்ச்சி சிறுகதைத் தொகுப்பில் உத்திகள் | 2450-2464 |
| 356. ஏ. இராஜசேகர் | பத்துப்பாட்டில் உணவும் உற்பத்தியும் | 2465-2480 |
| 357. மு. அப்துல் சமது & ஷே. நாகூர் கனி | இஸ்லாமியப் பார்வையில் - அஞ்சுவண்ணம் தெரு | 2481-2487 |
| 358. VARSHA, C.V & WILSON V.A | ANALYSIS OF ATHLETIC BURNOUT AMONG NATIONAL LEVEL TRACK AND FIELD MALE ATHLETES IN KERALA | 2488-2494 |
| 359. B. MATHIVANAN | SOCIAL STATUS IMPROVEMENT BY PERIYAR AND AMBEDKAR RELATED WITH GREAT REVOLUTIONARY MODERN THOUGHT IN TAMILNADU (INDIA) | 2495-2499 |
| 360. கோ.ப. நல்லசிவம் | பொருளதிகாரத்தில் மெய்ப்பொருட் கோட்பாடு | 2500-2505 |
| 361. இரா. ரமாதேவி & கு. சந்திரசேகரன் | இனியவை நாற்பது உணர்த்தும் இல்லறவியல் | 2506-2510 |
| 362. கி. வீரமணி & கு. சந்திரன் | பெண்ணிய எழுத்தாளர் ஔவை நிர்மலா | 2511-2516 |
| 363. நி. அமிருதீன் & க. சாகுல் ஹமீது | நற்றிணையும் நெல்லும் | 2517-2521 |
| 364. RAJIYA SULTAN | GOOD PRACTICES OR WOMEN EMPOWERMENT IN HIMACHAL PRADESH | 2522-2527 |
| 365. ஜெ. மணிகண்டன் & சி. கண்மணி | நாலடியாரில் மகளிர் மீக்கூறு | 2528-25 3 |
| 366. ANOOP SEBASTIAN | AEROBIC TRAINING AS THE BACKBONE OF THE WELL- BEING OF INDIVIDUALS | 2534- |
| 367. ஆ. வனிதா | இரட்டைக்காப்பியங்களில் இயற்கை இகந்த நிகழ்ச்சிகள் | 2541-254. |
| 368. மு. கிருஷ்ணமூர்த்தி | தமிழ் இதழியல் வரலாற்றில் செந்தமிழ் இதழின் பங்களிப்புகள் | 6-2551 |
| 369. இரா. தங்கலதா | பேராசியரியர் அ.சீனிவாச ராகவனின் மொழிபெயர்ப்பு உத்திகள் | -2557 |
| 370. G. PREMA & K. GOVINDARAJ | THE CONTRIBUTION OF WOMEN ASSOICAITON ON SOCIAL AW ENING DURING 20th CENTURY IN TAMIL | 25 2562 |
| 371. சிவ ஆதிரை & தீ.சி.கே. இராஜசேகர் | கம்பனில் ஆட்சிமுறை | 2563 |
| 372. மு.முகமது அலி ஜின்னா | கவிக்கோவின் படைப்புகளி கடவுள் துவம் | 2572-2576 |
| 373. து. கிருஷ்ணன் & சி.ஜெயபால் | நற்றிணை காட்டும் உணவு கள் | 2577-2584 |
| 374. இரா. சங்கர் & தி. முத்து | மோகமுள் புதினத்தில் தி. ஜா ராமனின் இசை | 2585-2592 |
| 375. தி. திவ்யா & மாதவி | திருசெ ப்நல்லூர் தல ாறு | 2593-2597 |
| 376. க. அ சாமி | இல கண ந களில் கைக்கிளை | 2598-2605 |
| 377. கா. நாதன் | தி விழுமங்களில் தன் சார்புகள் | 2606-2612 |
| 378. ஜெயபு வள்ளி ராஜ் | இல கியத்தில் ம்பிக்கைகளும பழக்கவழக்கங்களும் | 2613-2617 |
| 379. ஏ. இர சேகர் | பத்து பாட்டின் மைப்பியல் | 2618-2626 |
| 380. ஏ.பாஸ்க மேஷ் | மேலா ான்னுசாமி சிறுகதைகளில் விளிம்புநிலை மாந்தர்கள் | 2627-2633 |
| 381. க. ஜலேந் ர் & ஜ | மதுரைக்க க் காட்டும் இல்லறம் | 2634- 2643 |
| 382. க. இரமே | றை உத்திகள் நோக்கில் செவ்வியல் இலக்கியங்கள் | 2644-2648 |
| 383. செ. கயல் | வள்ளுவம் உணர்த்தும் தனிமனித அறங்கள் | 2649-2653 |
| 384. கோ. கலைய & கா. கணநா | 'வீரயுகநாயகன் வேள்பாரி'யில் இடம்பெறும் கொற்றவைக்கூத்தின் தன்மைகள் | 2654-2659 |
| 385. பெ. காளியானந்தம் & கா. கணநாதன் | திருவள்ளுவர், கபீர்தாஸ் பாடல்களில் அறக்கோட்பாடுகள் | 2660-2664 |
| 386. கு. நித்தியா & நா. குமாரி | சூர்யகாந்தன் சிறுகதைகளில் விளிம்பு நிலையில் பெண்கள் | 2665-2671 |
| 387. கூ. லதா | திருஞானசம்பந்தர் பாடல்களில் (மனம்) உளவியல் பார்வை | 2672-2677 |
| 388. பா. சங்கீதா | அறம் காக்கும் புறம் என நிறுவும் இயன்மொழித்துறை | 2678-2682 |
| 389. செ. நாகேஸ்வரி | கண்மணி குணசேகரன் சிறுகதைகளில் பெண்களின் மனக்குமுறல் | 2683-2689 |
| 390. த. விஜயலெட்சுமி & அ. மோகன்ராஜ் | பாரதிக் கண்ட பாரத சமுதாயம் | 2690-2696 |
| 391. தி. கோவிந்தராஜ் &ச. குமரேசமூர்த்தி | பொதுத்தளங்களில் பெண் கவிஞர்கள் | 2697-2706 |
| 392. இரா. பத்மா | கலித்தொகையில் பெண்களின் பழக்க வழக்கங்களும் அவர்களின் நிலையும் | 2707-2711 |
| 393. ச. சுந்தர் | மருதத்திணையில் பரத்தையர் பிரிவும் தலைவியின் ஊடலும் | 2712-2716 |
| 394. இரா. பிரவீணா | தமிழ், மலையாள உயிர்ப்புணர்ச்சியில் யகர வகர உடம்படுமெய்கள் | 2717-2723 |
| 395. கோ. ரங்கராஜன் | பூமணியின் அஞ்ஞாடி நாவலில் கிராமிய வாழ்வியல் | 2724-2728 |
| 396. கா. ரெங்கராஜ் | மானாவாரி மனிதர்கள் புதினத்தில் குறியீடும் காட்சியும் | 2729-2734 |
| 397. அ. அனுடயானா | வள்ளுவர் கூறும் அரசனின் நிலைகள் | 2735-2742 |
| 398. வ. கணபதிராமன் | எட்டுத்திக்கும் மதயானை புதினத்தில் விளிம்புநிலையினர் வாழ்வியல் | 2743-2748 |
| 399. செ. முருகநாதன் | 'மானாவாரி மனிதர்கள்' புதினத்தில் நடப்பியல் உத்திகள் | 2749-2753 |
| 400. செ. யோகம் | பதினெண்கீழ்க்கணக்கில் நீர் மேலாண்மை | 2754-2757 |
| 401. S. ரோஜாமணி | பெண்ணிய முன்னேற்றத்திற்கான வழிவகைகள் | 2758-2766 |
| 402. ஜெ. காமாட்சி | கி.ராஜநாரயணன் கரிசல் காடு - ஒரு பார்வை | 2767-2770 |


RePrint

Published by : **Raja Publications,** No. 10, Upstair, Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Mobile : 9600535241
Printed : **The Printing House,** Tiruchirappalli - 620 023, Tamil Nadu, India. Ph : +91 - 431-2420121

## Modern Thamizh Research

A Quarterly International Multilateral Thamizh Journal

*Published by*

**Raja Publications, Trichy-23.**

## INFORMATION FOR AUTHORS

Journal of **Modern Thamizh Research** (JMTR) is published Four (Every March, June, September & December) times a year. It primarily publishes significant original papers and survey articles on important advances of Modern Thamizh research in any of the following major areas:

- Classicalism (செவ்வியல்)
- Modernism (நவீனம்)
- Folklorism (நாட்டுப்புறவியல்)
- Archeologism (தொல்லியல்)
- Spritualism (பக்தியியல்)
- Traditioanlism (மரபியல்)
- Mediaism (ஊடகவியல்)
- Journlism (இதழியல்)
- Translationism (மொழிபெயர்ப்பியல்)
- Comparativism (ஒப்பியல்)
- Educationalism (கல்வியல்)
- Histroism (வரலாற்றியல்)

### Submission of the Manuscript

1. Manuscripts written in Thamizh or English may be submitted in two copies to the Chief Editor **Dr. M. Sadik Batcha, Associate Professor of Tamil, PG and Research Department of Thamizh, Jamal Mohamed College (Autonomous), Tiruchirappalli - 620 020, Mobile : 9600535241, Email : ms_batcha@yahoo.co.in**
2. Manuscripts should be prepared according to the following format.
   The first page of the manuscript should contain
   (i) the title
   (ii) the name(s) and institutional affiliation (s) of the author(s).
   (iii) an abstract of not more than 100 words; and
   (iv) a footnote giving the name and present address of the author to whom proofs and reprint order form should be addressed.
   (v) References at the end of the manuscript should be arranged in alphabetical order of the first letter of the surname and styled and punctuated according to the following format.
   [1] author(s) name(s), "Book name", Page, Edition number, Published Year, Book Publisher address.

### Publication of Accepted Papers

The editorial Policy of JMTR is to give a clear reply about the acceptance of all submitted papers, within a period of one month.

### Subscription Rate of JMTR

Libraries, Institutions and other establishments can subscribe for JMTR through publisher : **Raja Publications, 10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai, Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India. Mobile : 9600535241 website : rajapublications.com** and in case of any difficulty they should write to the Chief Editor at address given elsewhere.

| Subscription Rates | Years | Printed |
|---|---|---|
| (Year) India INR ₹ | 1 Years Only | 2000 |
| Other Countries INR ₹ | 1 Years Only | 3000 |
| (Life) India ₹ | 10 Years Only | 10,000 |
| Other Countries INR ₹ | 10 Years Only | 20,000 |

Re Print

4. நம்மாழ்வார், அந்தாமத்தன்பு, பாடல்.10., சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, மூன்றாம் பதிப்பு 1983.

5. கருணாநிதி, கவிக்கோக்கவி, ப.142., தமிழ்ப் புத்தகாலயம், சென்னை - 5, முதல் பதிப்பு 2015.

6. திருமூலர், திருமந்திரம், பாடல்.257., பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், ஈரோடு, மு.ப., 1994.

7. பாரதியார், பாரதியார் கவிதைகள், ப.75., பாரி நிலையம், சென்னை - 1, இரண்டாம் பதிப்பு 1984.

8. க.நாராயணன், சித்தர் தத்துவம், ப.30., பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம், ஈரோடு, மு.ப., 1994.

9. சிவவாக்கியார், சித்தர் பாடல்கள், பாடல்.30., மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், மு.ப., 1983.